பொதுவாக கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இதற்கான அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அந்தத் தவறுகள் அவ்வப்போது அறியாது நடந்துகொண்டு வருகின்றது, அதிலே ஏதாவது சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றாலும், அல்லது அந்த மேம்படுத்துவதற்குரிய வழிவகைகள் இருக்குமேயானாலும் அதைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து ஆவன செய்யலாம். மத்திய அரசும் ஆராய்ந்து வருகின்றது, மநில அரசும் ஆராய்ந்து வருகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை. தலைவரவர்களே, மற்ற தேசிய வங்கிகள் தருகின்ற வட்டி விகிதத்தை விடமற்ற கூட்டுறவு வங்கிகள் தருகின்ற வட்டி விகிதத்தைவிட, இந்த சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் அதிகமான வட்டி தரப்பட்டாலும் கூட இதிலே அதிகமான சேமிப்பு இல்லை என்ற நிலைமை இருக்கின்றது. மேலும் அதிலே ஈடுபட்டிருக்கின்ற அலுவலர்கள் அந்த அளவுக்கு ஆர்வம் காட்டாத நிலைமை இருப்பதால், அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுகின்ற வகையிலே அவர்களுக்கு இன்செண்டிவ் ஏதாவது வழங்கப்படுகின்றதா? அல்லது அந்த முறை அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்திலே ஆங்காங்கே ஏஜெண்டுகள் என்ற முறையிலே பலர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு ஓரளவுக்கு இன்செண்டிவ் தரப்படுகின்றது. சிறு சேமிப்புக்களைச் சிறந்த முறையிலே சேர்த்துத் தருகின்றவர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்துகின்ற அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 16 மாவட்டங்களில் எந்த மாவட்டம் சிறந்த முறையிலே அதனுடைய இலக்கையும் நிறைவேற்றி, மேற்கொண்டும் நிதி சேர்த்துத் தருகின்றதோ அதை ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையிலே ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு பரிசினை வழங்கி, மேலும் அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே சிலபல நல்ல திட்டங்களைத் தீட்டி அதற்கு அந்த நிதியினை செலவழிக்கலாம் என்று கூறிக்கொண்டு வந்திருக்கின்றது.

மண்டபம் பகுதியிலுள்ள புறம்போக்கு நிலம்

*வினா எண் 163 திரு ச. அங்குசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பார —

(அ) மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் முகவை மாவட்டத்தில் உள்ள மண்டபம் பகுதியில் இருக்கும் அரசு புறம்போக்கு நிலத்தை தமது உபயோகத்திற்காக தமிழக அரசைக் கேட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம் முகவை மாவட்டத்தில் உள்ள மண்டபம் பகுதியில் இருக்கும் அரசின் புறம்போக்கு நிலங்களை தனது உபயோகத்திற்காகக் கேட்டிருக்கிறார்கள். அரசு அதை அவர்களுக்கு அளித்துள்ளது.

திரு. ச. அங்குசாமி: தலைவரவர்களே, மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பல புறம்போக்கு நிலங்களை வேண்டும் என்று கேட்டு வருகின்றது. அப்படியானால் இது வரை எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கெல்லாம் மத்திய அரசு தமிழ்நாடு அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் கொடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிறுவனங்களுக்காகவும், மற்றவைகளுக்காகவும் மாநில அரசு நிலங்களைக் கொடுக்கின்ற போது சில இடங்களைப் பணத்திற்கும், சில இடங்களை இலவசமாகவும் கொடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. அங்குசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபம் பகுதியில் துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக மத்திய அரசு அங்கே வந்து பார்வையிட்டதாக அறிகிறேன். அப்படி பார்வையிட்ட பிறகு, தமிழ்நாடு அரசாங்கத்திடம் துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இடம் கேட்டு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்களா? அப்படியானால் அது எந்த இடத்திலே அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையிட்டதும், அதற்கான நிலம் கேட்டதுமான தகவல்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மண்டபத்திற்கு பக்கத்திலே மத்திய அரசு, பாதுகாப்பு வேலைகளைச் செய்வதற்கு இடம் கேட்டிருக்கிறதா அல்லது எந்தத் தொழிற்சாலையையாவது ஆரம்பிக்க என்று இடம் கேட்டதா? அல்லது கப்பல் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அங்கே இடம் கேட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கப்பல் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதாக இருந்தால் கடற்கரைக்கு பக்கத்திலே அமைப்பார்கள். கப்பலிலே வேலை செய்யும் பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டுவதற்காகத்தான் மண்டபம் பகுதியிலே நிலத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

சென்னையில் குடியிருக்கும் ஆதி ஆந்திரர் குடிகளுக்கு பட்டா வழங்கும் திட்டம்

*வினா எண் 294 திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையில் வண்ணான்துறை, கக்கன் காலனி, ஊரூர் பகுதி ஆகிய இடங்களில் ஆதி ஆந்திரர்கள் குடிசைகள் போட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் வண்ணான் துறை, கக்கன் காலனி, ஊரூர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆதி ஆந்திரர்கள் நிலம் கேட்டிருக்கிறார்கள்; பலர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடு ஆகிக்கொண்டிருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி ஆந்திரர்களுக்கு இதுவரையில் தமிழக அரசு வீட்டுமனைப்பட்டாக்களையோ அல்லது நிலப்பட்டாக்களையோ வழங்கியுள்ளதா? ஆம் எனில், எத்தனை பேர்களுக்கு எவ்வளவு வழங்கியுள்ளது என அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஆந்திர ஆதி திராவிடர்களில் பெரும்பாலும் சென்னை மாநிலத்திலேதான் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கக் கூடியவர்களின் பட்டியல் என்னிடத்தில் இல்லை. சென்னையில் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டும் ஏறக்குறைய 900 பேர்களுக்கு அதிகமாக இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 846 பேர்களுக்கு கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS